அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: 26/2017

எனது இலக்கம் : Pns/P8/02/16

அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.
2017.10.12

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்களுக்கு

**விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்தின் பழைய இலக்கம்: 82/83மற்றும் M/F ஆம் வகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பழைய அங்கத்தவர்களை இயங்கலை முறையின் (Online) ஊடாக மீளப் பதிவு செய்தல்**

1898 விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக் கட்டளைச் சட்டம் மற்றும் 1983 இலக்கம் 24 இனைக் கொண்ட தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சட்டத்திற்கு ஏற்ப சகல அரச ஊழியர்களுக்கும் கட்டாயமாக விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பங்களிப்புச் செய்வது அவசியமான விடயமாகும். இது தொடர்பாக அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் மூலம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் பால் உமது கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

02. அதற்கிணங்க ஏற்கனவே பொது 86, பொது 86(அ) விண்ணப்பங்ளைப் பயன்படுத்தி சகல அரசாங்க ஊழியர்களும் 82/83 மற்றும் F/M வகுதியின் கீழ் அங்கத்துவ இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

03. அவ்வாறே விவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்யும் புதிய அலுவலர்களை 2015.03.12 ஆந் திகதி முதல் இயங்கலை முறையினை (Online) அறிமுகப்படுத்தி PD 01 ஆம் விண்ணப்பப்படிவத்தின் மூலம் பதிவுசெய்து இலக்க வகுதிகள் வழங்கப்பட்டுள்ளது.

04. இதுவரையில் ஓய்வூதியத் திணைக்களத்தின் சகல நடவடிக்கைகளும் கணனிமயப்படுத்தப்பட்டு ஒழுங்குமுறையில் மற்றும் எளிதாக்கப்பட்டுள்ளதுடன், சகல அரச அலுவலர்களினதும் ஓய்வூதிய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இயங்கலை முறைமையினைப் பயன்படுத்தி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

05. அதுவானது மிகவும் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மிக்க நிகழ்ச்சித்திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் அலுவலர்களின் தகவல்களை நாளதுவரைப்படுத்தப்படுவதன் காரணமாக மீண்டும் மீண்டும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு அவசியப்படுவதில்லை. இவ் வசதியினை மேலும் மேம்படுத்துவதற்காக மேற்குறிப்பிட்ட 02 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள வகையில் தற்போது விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்தில் பதிவு செய்துள்ள சகல அரச அலுவலர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் ( புதிய / பழைய) மற்றும் தற்போது உமக்கு வழங்கப்பட்டுள்ள விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் இலக்கத்தினைப் பயன்படுத்தி இயங்கலை முறையின் (Online) ஊடாக மீளப் பதிவுசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

06. இச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்கனவே இயங்கலை முறைக்கு (Online) பதிவுசெய்துள்ள அங்கத்தவர்கள் தங்களது தகவல்களை இற்றைப்படுத்துவதற்குரிய (Update) வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக இயங்கலை முறையின் ஊடாக பதிவு செய்யாத சகல அரசாங்க அலுவலர்களும் 2018.03.31 ஆந் திகதிக்கு முன்னர் மீளப் பதிவுசெய்வது கட்டாயமாக அமைவதோடு, அதற்காக www.pensions.gov.lk என்ற ஓய்வூதியத் திணைக்களத்தின் இணையத்தளத்தின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் மீளப் பதிவு செய்தல் என்னும் நுழைவாயிலை அடைந்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு ஏற்ப விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் மீளப் பதிவுசெய்து கொள்ள முடியும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**ஜே.ஜே.ரத்னசிரி**
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு